**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.155/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மோகன்ராஜ், வயது 37 |
| Father Name/Husband Name | : | சின்னத்தம்பி |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | வெல்டிங்வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of December 2024.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து வெல்டிங்வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன கந்தசாமி எனது மாமனார். நான் 18.08.2023 ஆம் தேதி நான் வேலைக்கு சென்றிருந்த போது எனது மனைவி எனக்கு தொலைபேசி மூலமாக எனது மாமனார் கந்தசாமிக்கு காலாங்கரைப்பட்டியில் விபத்து ஏற்பட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் இருப்பதாக தகவல் சொன்னார்.
2. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் இறந்துவிட்டார். அவரது உடல் மீது நடந்த பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. உங்களுக்குபோன் மூலம் தகவல் கிடைத்து நீங்கள் மருத்துவமனைக்கு செல்லும் போது மணி என்ன இருக்கும் என்றால் இரவு 07.00 மணியிருக்கும். நீங்கள் சென்று பார்த்த போது உங்கள் மாமனார் உயிருடன் இருந்தாரா அல்லது இறந்துவிட்டாரா

என்றால் இறந்துவிட்டார். அவரது உடலை பார்த்தீர்களா என்றால் ஆம்.

2. நீங்களும் உங்கள் மனைவியும் மருத்துவமனைக்கு போன போது உடன் யாரும் இருந்தார்களா என்றால் நாங்கள் மட்டும் தான் இருந்தோம்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.